[1993 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மூலமாக வழங்கப்படுகின்ற எண்ணெய் வித்துக்கள் எல்லாம் சிறு விவசாயிகளின் பெயரால் அங்கிருக்கிற அலுவலர்களால் ஒட்டு மொத்தமாக தனியாருக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதனைத் தடுப்பதற்கு அந்தந்த தொகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையோடு—அங்கு இருக்கிற விவசாயிகளுக்கு இவ்வளவு தான் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து—சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு இவ்வளவு ஒதுக்கீடு அதன் கீழே அந்த வேளாண்மை கோட்டத்திற்கு இவ்வளவு ஒதுக்கீடு, அந்த ஒன்றியத்திலே இருக்கக் கூடிய வேளாண்மை அலுவலருக்கு இவ்வளவு ஒதுக்கீடு என்று அரசாங்கம் ஒதுக்கீடு செய்கிறது. சில நேரங்களிலே தவறு வருவது தவிர்க்க முடியாதது என்று நான் கருதுகிறேன். அத்தோடு அப்படி தவறு செய்பவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

317—

பூம்புகார் கடற்கரை ஓரங்களில் புறம்போக்கு நிலங்களில் சவுக்குக் கன்றுகள் நடுதல்.

*15785—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் தொகுதியில், கடற்கரை ஓரங்களில் உள்ள மணற்பாங்கான அரசு புறம்போக்கு நிலங்களில் சவுக்குக் கன்றுகள் நடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

1993 ஏப்ரல் 12]

திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் 30 கிலோ மீட்டர் தூரம் உள்ள கடற்கரைசாலை உள்ளது. அங்கே அரசு நிலங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளது. ஆகவே, அங்கே சவுக்குக் கன்றுகளைப் போட்டால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும். மேலும், கடல் அரிப்பையும் தடுக்க உதவும். அதை மாண்புமிகு இதய தெய்வம் ஆட்சியில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் கடற்கரை ஓரங்களில் சவுக்குக் கன்றுகள் நடுவது குறித்து தற்போது செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தஞ்சை சமூக காடுகள் கோட்டத்தைப் பிரித்து நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவடத்திற்கு என புதிதாக ஒரு சமூகக் காடுகள் கோட்டம் தொடங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. பூம்புகார் உள்ளிட்ட கடற்கரை ஓரங்களில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் சவுக்கு மரங்களை வளர்க்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 318, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

318—

தாலுகா தலைமையிடங்களில் அரசு ஊழியர் குடியிருப்பு.

*9330—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுகா தலைமையிடங்களில் அரசு ஊழியர் குடியிருப்புக்கட்ட நிர்வாகச் சிக்கல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு விதிகளை தளர்த்த முன்வருமா ?